அசல்

18.5.1942. தி. சதாசிவஐயர்.

அசல் -1



யாழ்ப்பாணம்

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில்,

நிகழும் சித்திரபானுஸு வைகாசிமீ ௪ உ (17-5-42)

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு,

வண்ணார்பண்ணை

வைத்தியேசுவர வித்தியாசாலை மண்டபத்தில்,

தமிழிற்கும், தமிழகத்திற்கும் அரும்பெருந் தொண்டாற்றித் "தமிழ்த் தாத்தா" என்று எம்மெல்லோராலும் அன்புடன் பாராட்டப்படும் மகாமகோபாத்யாய, தாக்ஷிணாத்திய கலாநிதி,

**டாக்டர் (Doctor) உ. வே. சாமிநாதையரவர்களது**

பிரிவைக் குறித்து

ஓர் அநுதாபக்கூட்டம் நடைபெறும்.

அத்தருணம் தமிழன்பர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

**தி. சதாசிவ ஐயர்**

காரியதரிசி

யா. ஆ. தி. பா. சங்கம்

யாழ்ப்பாணம்
15-5-'42

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.—1520/42

அசல்

உ

சிவமயம்.

MR. J. T. SADASIVA (IYER)
DISTRICT INSPECTOR OF SCHOOLS.

Private Address:-
NEERAVI ROAD, JAFFNA, CEYLON.

Education Office, Jaffna
18-5-1942

ஸ்ரீ. வே. சுந்தரஐயர் அவர்களுக்கும்
ஸ்ரீ. சு. கல்யாணசுந்தரஐயர் அவர்களுக்கும்

அநேக நமஸ்காரஞ் செய்து விசனத்துடன் எழுதுவதாவது!

அன்புடையீர்! தாங்கள் தயை கூர்ந்து அனுப்பிய 30/4/42 தேதியைக் கொண்ட கார்ட் வரப்பெற்றேன். மகோன்னதம் பொருந்திய ஐயா அவர்களை இழந்தோம். அகத்திய முனிவரின் அபர மூர்த்தமாகிய அபர அகத்தியனை இழந்தோம். தமிழ்த் தெய்வ முனிவரை இழந்தோம். தாங்களோ அனைத்தினும் பெரிய பொக்கிஷத்தை இழந்தீர்கள். உங்களுடைய துயரம் மிகப் பெரியது. தமிழுலகம் முழுதும் உங்கள் துயரத்திற் பங்கு பற்றி நிற்கிறது. இந்த மஹானுபாவனது பிரிவால் ஒவ்வொரு தமிழனும் தான் பெரிய நஷ்டமடைந்ததாக உணர்ந்து துன்புறுகின்றான். உங்களுக்கு நேர்ந்த இப் பெரிய துயரத்தைத் தாங்கி ஆறுதல் பெறும்படியாக வரம் அளிக்கும்படி பரமசிவனைப் பிரார்த்திக்கின்றேன்.

யாழ்ப்பாண மக்கள் ஐயா அவர்களுடைய பிரிவை அறிந்து மிக்க வருத்தப்படுகின்றனர்.

17-5-42 மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலய மண்டபத்தில் ஓர் அநுதாபக் கூட்டம் நடைபெற்றது. பண்டிதர், புலவர், ஆசிரியர்கள் பொது ஜனங்கள் ஆகிய மிகப்பலர் சமுகமளித்தனர். இக்கூட்டத்து அழைப்புப்பத்திரப் பிரதி ஒன்று இத்துடன் வைத்தனுப்புகின்றேன்.

ஐயா அவர்களது அறிவின் விசாலத்தையும் குண விசேஷங்களையும் அரிய பெரிய தமிழ்த் தொண்டினையும் பற்றிப் பாராட்டி, அவர்களது பிரிவால் துன்பப்படும் அவர்களுடைய அருமைத் தம்பி சுந்தரஐயர் அரும்பெறற் புதல்வர் கல்யாணசுந்தரஐயர் என்பவர்களுக்கு அநுதாபத்தைத் தெரிவிப்பதாக ஒரு தீர்மானம் சர்வஜனசம்மதமாய் நிறைவேற்றப்பட்டது.

அதனைத் தாங்களுக்குப் பணிவோடு தெரியப்படுத்துகின்றேன்.

அன்பன், தி. சதாசிவஐயர்
காரியதரிசி
யாழ். ஆ. தி. பா. சங்கம்,

அசல்

18.5.1942. தி. சதாசிவஐயர்.

அசல் –1



அசல்

18.5.1942. தி. சதாசிவஐயர்.

அசல் -1

யாழ்ப்பாணம், ஆரிய
திராவிட பாஷாபிவிருத்
தி சங்கம்.

Photo

18.5.42

TIR...
23 MAY 42
A.M.

OPENED BY
CENSOR